# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2397/30 - 2024 අගෝස්තු මස 14 වැනි බදාදා - 2024.08.14

*2397/30 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டம்**

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2024 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 22 (7) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71(1) ஆம் பிரிவின் கீழ் தொழில்நுட்ப அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி,
தொழில்நுட்ப அமைச்சு.

கொழும்பு,
2024, ஓகத்து 06.

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வானொலி அலைக்கற்றைகளை (ஸ்பெக்டரம்கள்) ஏலவிற்பனை செய்யும் ஒழுங்குவிதிகளாக அறிமுகம் செய்ய முடியும்.

2. இந்த ஒழுங்குவிதிகள் 2024 ஓகஸ்ட் 06 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருமாக.

3. புரோட்பேன்ட் சேவை தொடர்பாக தொலைத்தொடர்புகள் அலைக்கற்றைகளை (ஸ்பெக்டரம்கள்) வழங்குவது தொடர்பாக ஆணைக்குழு இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் ஏல விற்பனையைச் செய்தல் வேண்டும்.


1A - PG 6825 — 29 (2024/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. ஆணைக்குழுவினால் ஏலவிற்பனை செய்யும் போட்டியான செயற்பாட்டை கடைப்பிடிக்கும் குறிக்கோளானது;

4.1 வெளிப்படைத் தன்மை மற்றும் பாரபட்சம் காட்டாமல் வானொலி அலைக்கற்றைகளை (ஸ்பெக்டரம்கள்) கையளிக்கும் வேலைச்சட்டகமொன்றை உறுதிப்படுத்துவதாகும்.

4.2 வானொலி அலைக்கற்றைகளை (ஸ்பெக்டரம்கள்) பயன்படுத்துவதன் ஊடாக போட்டியை ஏற்படுத்துதல் மற்றும் வானொலி அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பிரவேசத்திற்கு வசதிகளை வழங்குதல்.

4.3 சந்தை கேள்வியின் படி வானொலி- அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பொருளாதார பெறுமதியை தீர்மானிப்பதற்காக வெளிப்படைத் தன்மையுடன், நியாயமான, போட்டித்தன்மையான மற்றும் பாகுபாடு காட்டாத விலையிடல் முறைமையொன்றை அமைத்தல்.

5. ஆணைக்குழுவினால்:-

5.1 ஏலம் விடுவதற்கு உத்தேசித்துள்ள -அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பகுதிகளை (lots) விபரிப்பதற்கும்; மற்றும்

5.2 ஏலம் நடைபெறும் விதம் பற்றிய சுருக்கமான அறிமுகமொன்றை செய்வதற்கு ; மற்றும்

5.3 ஏலத்தில் பங்குபற்றுவதற்காக ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிப்பதற்கு நபர்களுக்கு அழைப்பு விடுவதற்கு; மற்றும்

5.4 விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி மற்றும் நேரத்தைக் குறிப்பிடுவதற்கு; மற்றும்

5.5 இந்த சட்டதிட்டங்களின் பிரகாரம் கையளித்தல் வழங்கப்படுவதாக குறிப்பிடுவதற்கு; மற்றும்

5.6 விண்ணப்ப தகவல்கள், விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியின் ஊடாக அல்லது இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளக் முடியும் எனக் குறிப்பிட்டு ஆணைக்குழுவில் பெற்றுக் கொள்ள முடியும் என குறிப்பிட்டு.

உத்தியோகபூர்வ இணைய தளத்தில் வெளியிடுதல் வேண்டும்.

6. ஆணைக்குழுவினால் அனைத்து ஏலங்களின் போதும் கையளிப்பு அறிவித்தலொன்று (NoA) வெளியிடப்பட வேண்டியதுடன், தகைமையைப் பெறுவதற்கு பொருத்தமானவர்கள், ஏலவிற்பனை மாதிரிப் படிவம், நிபந்தனைகள், கையளிப்பு கால எல்லை, நடபடிமுறைகள் மற்றும் ஏலதாரர்கள் பங்குபற்றும் விதம் பற்றிய ஆலோசனை அதில் உள்ளடங்க வேண்டியதுடன் அவை வரையறைக்கு உட்பட்டிருக்க முடியாது.

7. ஏலத்திற்கு பங்குபற்றுவதற்கு பதிவு செய்யப்பட்ட ஏலதாரர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படுவதுடன் சகல ஏலம் தொடர்பாகவும் தகைமை பெற்ற ஏலதாரர்கள் ரூ. 100,000/- நுழைவு கட்டணமாக செலுத்தி பதிவு செய்யப்படுவர்.

8. NoA இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய கால எல்லை தொடர்பாக அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பகுதிகளை (lots) வெற்றிபெற்ற ஏலதாரர்களுக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

9. வெற்றி பெற்ற ஏலதாரர்கள் ஏலம் முடிவடையும் போது வெற்றி பெற்ற ஏலதாரர்களின் தொகையில் 10% ஐ வைப்புச் செய்ய வேண்டியதுடன் எஞ்சிய ஏலத்தொகையை சபையினால் தீர்மானிக்கப்பட்ட கால அட்டவணைக்கு ஏற்ப செலுத்துதல் வேண்டும்.

10. உரிய கால எல்லையினுள் செலுத்தாவிட்டால், வெற்றி பெற்ற ஏலதாரர்களுக்கு பகுதிகள் (lots) தொடர்பாக சகல உரிமைகளும் நிறுத்தப்படும். சபையினால் அவ்வாறான அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பகுதிகள் (lots) புதிய கையளிப்பு தொடர்பாக வழங்கப்படும்.

11. வெற்றிபெற்ற ஏலதாரர்கள் ஏலத் தொகைக்கு மேலதிகமாக அரச வரிகளையும் செலுத்துதல் வேண்டும்.

12. ஆணைக்குழுவினால் ஒவ்வொரு பகுதி (each lot) தொடர்பாக ஆகக் குறைந்த விலை தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அது கையளிப்பு அறிவித்தலில் (NoA) குறிப்பிடப்படும்.

13. சகல பதிவு செய்த ஏலதாரர் தொடர்பாகவும் ஆணைக்குழுவினால் ஆள் அடையாள அட்டையொன்று விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

14. வெற்றிபெற்ற ஏலதார்கள், தொடர்பில் சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு ஏற்ப அலைக்கற்றை அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட வேண்டியதுடன் வெற்றிபெற்ற ஏலத் தொகையை செலுத்துவதற்கு மேலதிகமாக, விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் அமுலில் உள்ள சட்டம் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

15. செலுத்த காலத்தின் போது ஆணைக்குழுவுக்கு புதிய கையளிப்புக்கள் தொடர்பாக அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பகுதிகளை (lots) ஏல விற்பனை செய்ய வேண்டியேற்படும்.

16. ஏலதாரர் என்பது ஏலத்தை நடாத்துவதற்கு ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நபர் அல்லது ஏலத்தை நடாத்துவதற்கு ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றாகும்.

17. ஏலதாரரினால்:-

17.1 சகல பகுதிகள் (each lot) தொடர்பாகவும் ஏலங்களை அழைத்தல்;

17.2 பகுதி (the lot) தொடர்பாக அதிக ஏலத்தொகையை முன்வைக்கின்ற பதிவு செய்த ஏலதாரர்கள் அடையாளம் காணல் மேற்கொள்ளப்படும்.

பிணக்குகளுடன் கூடிய ஏலமொன்றின் போது:

17.3 ஏலதாரர் தனி தீர்ப்பாளராக பணியாற்றுவார்; மற்றும்

17.4 ஏலதாரரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

18. தகைமை பெற்ற ஏலதாரர்களின் எண்ணிக்கை, போட்டித்தன்மையின் அளவு, சந்தை நிலைமை மற்றும் அலைக்கற்றைகளைப் பெற்றுக் கொள்ளும் இயலுமை போன்றவற்றை கவனத்திற் கொண்டு அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பகுதிகள் (lots) தொடர்பாக கீழ் குறிப்பிட்ட பொருத்தமான ஏல மாதிரிகள் ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படும். கையளிப்பு அறிவித்தல் (NoA) ஆணைக்குழு இணைய தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**ஏலவிற்பனை மாதிரிப் படிவம்**

18.1 தனி- சுற்றி முத்திரையிடப்பட்ட - விலைமனு ஏலங்கள் (பொது)

18.1.1 தனி சுற்றின் ஏலத்தின் ஊடாக ஏலதாரர்களுக்கு அவர்கள் ஆர்வம் காட்டும் அலைக்கற்றை (ஸ்பெக்டரம்) தொடர்பாக விலையொன்றை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பமொன்று மாத்திரம் வழங்கப்படும்.

18.1.2 ஏலதாரர்களினால் கையளிப்பு அறிவித்தல் (NoA) ஊடாக வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அலைக்கற்றை (ஸ்பெக்டரம்) தொடர்பாக ஆகக் குறைந்த விலை வெளியிடப்படுதல் வேண்டும்.

18.1.3 ஏலதாரர்களுக்கு விதிக்கப்படுகின்ற கால எல்லையினுள் தமது ஏலதாரர்களினால் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.

18.1.4 தீர்மானிக்கப்பட்ட கால எல்லையினுள், ஏலதாரரினால் விலைமனு விண்ணப்பமொன்றின் ஊடாக அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பகுதிகள் (lots) தொடர்பாக அவருடைய / அவளுடைய விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்- முத்திரையிடப்பட்ட கடித உறையில் உரிய ஆவணத்தை இட்டு ஏலதாரரருக்கு கையளித்தல் வேண்டும், அவ்வாறு இல்லையாயின் ஏலதாரரின் விலைமனு ஏனைய ஏலதாரர்களுக்கு தெரியாத வகையில் இலத்திரனியல் விலைமனுச் செய்யும் முறைமையின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் ஆர்வம் காட்டாத பகுதிகள் (lots) தொடர்பாக ஏலத் தொகை பூச்சியமாக எழுதுதல் வேண்டும்.

18.1.5 விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் நீக்கிக் கொள்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது.

18.1.6 விலைமனுக்களை இடுவதற்கு விதிக்கப்பட்ட கால எல்லை முடிவடைந்ததும், ஏலதாரரினால் பெறுபேறுகள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

18.1.7 ஒரு பகுதி ( a lot) தொடர்பாக விண்ணப்பிக்கப்பட்ட உயர் விலைமனு அப் பகுதியை (the lot) வெற்றி கொள்வதுடன், வெற்றிபெற்ற விலைமனுதாரர் அந்தப் பகுதி (the lot) தொடர்பாக அவர்/ அவள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

18.1.8 விலைமனுதாரர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களினால் சமமான விலைமனுக்கள் (சமமான) விலைமனு சீட்டிழுப்பொன்றின் ஊடாக தீர்க்கப்படுதல் வேண்டும்.

18.2 தனி – சுற்றி முத்திரையிடப்பட்ட விலைமனுக்களின் ஏலம் - (SRSB) – விகிரி ஏலம்

18.2.1 இந்த ஏலத்தின் ஊடாக இரண்டாவது விலையுடன் தனிச் சுற்றில் முத்திரையிடப்பட்ட ஏலத்திற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

18.2.2 ஏலதாரரினால் வழங்குகின்ற ஒரு அலைக்கற்றை (ஸ்பெக்டரம்) தொடர்பான கையளிப்பு அறிவித்தலில் (NoA) குறிப்பிட்ட ஆகக் குறைந்த விலையை வெளியிடுதல் வேண்டும்.

18.2.3 விலைமனுதாரருக்கு விதிக்கப்பட்ட கால எல்லையினுள் தமது விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர் அனுமதி வழங்குதல் வேண்டும்.

18.2.4 விதிக்கப்பட்ட கால எல்லையினுள், விலைமனுதாரரினால் மாதிரிப் படிவமொன்றில் பலதரப்பட்ட அலைக்கற்றை (ஸ்பெக்டரம்) பகுதிகள் (lots) தொடர்பாக அவரின் / அவளின் விலைமனுவைச் சமர்ப்பித்தல் வேண்டும் – முத்திரையிடப்பட்ட கடித உறையில் உரிய ஆவணத்தை இட்டு ஏலதாரரருக்கு கையளித்தல் வேண்டும், அவ்வாறு இல்லையாயின் விலைமனுதாரரின் விலைமனு ஏனைய விலைமனுதாரரினால் பார்வையிட முடியாத வகையில் இலத்திரனியல் விலைமனுவிடல் முறைமையின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் விலைமனுதாரர் ஆர்வம் காட்டாத அலைக்கற்றை (ஸ்பெக்டரம்) பகுதி (lots) தொடர்பாக பெறுமதி பூச்சியமாக எழுதுதல் வேண்டும்.

18.2.5 விலைமனு சமர்ப்பித்த பின்னர் நீக்கிகொள்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது.

18.2.6 விலைமனுவிடலுக்கு தீர்மானிக்கப்பட்ட கால எல்லை முடிவடைந்ததும், ஏலதாரரினால் பெறுபேறுகள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

18.2.7 பகுதியொன்று (a lot) தொடர்பாக விண்ணப்பிக்கப்பட்ட உயர் தொகை அந்த பகுதியை (the lot) பெற்றுக் கொள்வதுடன், வெற்றிபெற்ற விலைமனுதாரர் அந்தப் பகுதி (the lot) தொடர்பாக கிடைத்த இரண்டாவது உயர் விலையைச் செலுத்துதல் வேண்டும். இரண்டாவது உயர் விலைமனுவொன்று இல்லையென்றால், வெற்றிபெற்ற விலைமனுத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

18.2.8 சமமான விலைமனு, அதாவது விலைமனுதாரர்கள் இருவர் அல்லது அதற்கும் அதிகமானவர்களினால் பகுதியொன்று (a lot) தொடர்பாக விண்ணப்பித்த சமமான விலைமனுக்கள் தொடர்பாக சீட்டிழுப்பு மூலம் தீர்க்கப்படும்.

18.3 சமமான பல்வகை - ஏலம் (SMRA)

18.3.1 ஏலதாரரினால், வழங்கப்படும் அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்) பகுதியொன்று (a lot) தொடர்பாக ஆகக் குறைந்த விலை கையளிப்பு அறிவித்தல் (NoA) ஊடாக வெளியிடப்பட வேண்டியதுடன் இலத்திரனியல் ஏலம் வைத்தல் முறைமையொன்றின் ஊடாக வெளிப்படுத்தல் வேண்டும்.

18.3.2 முதல் சுற்றில், ஏலதாரரினால் விதிக்கப்பட்ட கால எல்லையினுள், ஏலதாரர் ஏலம் தொடர்பான மாதிரிப் படிவமொன்றின் மூலம் அல்லது ஏலதாரரின் ஏல விண்ணப்பம் ஏனைய ஏலதாரர்களினால் பார்வையிட முடியாத வகையில் இலத்திரனியல் ஏல விண்ணப்ப முறைமையின் மூலம் ஒன்றுடன் ஓன்று வித்தியாசமான பகுதிகள்(lots) தொடர்பாக அவரின் / அவளின் ஆரம்ப ஏலம் வைத்தல் வேண்டும். ஏலதாரர் ஆர்வம் காட்டாத பகுதி (lots) தொடர்பாக ஏலத்தொகை பூச்சியமாக எழுதுதல் வேண்டும்.

18.3.3 விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் நீக்கிக் கொள்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது.

18.3.4 முதல் சுற்று முடிவில், எல்லாப் பகுதிகள் (each lot) தொடர்பாகவும் முன்னுரிமை விலைமனுத் தொகையை சகல ஏலதாரர்களுக்கும் வெளிப்படுத்தல் வேண்டும்.

18.3.5 ஏலதாரரினால் தீர்மானிக்கப்பட்ட கால எல்லையின் பின்னர், இரண்டாவது சுற்றை திறந்து முதல் சுற்றைப் போன்று நடைபெறுமாக என்ற அடிப்படையில் அடுத்த சுற்று தொடர்பாக தமது உபாயத்தை திட்டமிடல் வேண்டும்.

18.3.6 ஒவ்வொரு சுற்று முடிவிலும் ஏலதாரர்களினதும் அனுபவம் மற்றும் அவர்கள் எடுக்க வேண்டிய தீர்மானங்களின் சிக்கல் தன்மையின் படி சுற்றுக்களில் மற்றும் இடைவேளைகளின் கால எல்லை மாற்றப்படுதல் வேண்டும்.

18.3.7 ஒரு சுற்றில் ஒரு பகுதி தொடர்பாக ஏல விண்ணப்பம் இல்லாத பட்சத்தில் ஏலம் நிறைவடையும். ஆரம்ப சுற்றில் அதிக ஏல விண்ணப்பங்கள் உரிய பகுதி (lots) யை வெற்றிபெற்றுக் கொள்வதுடன் வெற்றிபெற்ற ஏலத்தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

18.3.8 சுற்றொன்றில் ஒரேயொரு விலைமனு இருக்கின்ற பட்சத்தில் ஏலம் நிறைவடையும். அதன் போது உரிய விலைமனு அந்தப் பகுதியை (the lot) அடைந்து கொள்வதுடன் விலைமனுத்தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

18.3.9 செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்காக, பொதுவாக ஏலத்தின் முன்னேற்றத்தின் அடிப்படையில், முன்னைய சுற்றில் உயர் விலைமனுக்களில் 1% முதல் 15% வரையான இடைவெளியில் காணப்படும் வகையில் ஏலதாரரினால் ஒரு சுற்றிலிருந்து இன்னொரு சுற்று என்ற அடிப்படையில் குறைந்த விலைமனு அதிகரிப்பு விதிக்கப்படுதல் வேண்டும்.

18.4 குளொக் ஏலம் (CA)

18.4.1 முதலாவது சுற்றின் போது, பகுதியொன்று (a lot) தொடர்பாக குளொக்கில் குறிப்பிடுதல் வேண்டும் (Clock Price).

18.4.2 ஏலதாரரினால் தீர்மானிக்கப்பட்ட கால எல்லையினுள், ஏலதாரரினால் இந்த விலைக்கு எவ்வளவு பகுதிகள் (lots) அளவு கொள்வனவு செய்ய முடியும் என குறிப்பிடுதல் வேண்டும் – உரிய ஆவணம் முத்திரையிடப்பட்ட கடி உறையில் இட்டு ஏலதாரர்களுக்கு தெரியாத இலத்திரனியல் முறைமையொன்றின் ஊடாக வெளியிடப்படுதல் வேண்டும்.

18.4.3 விலைமனுதாரர் ஏலத்திலிருந்து வெளியேறுகின்ற கோரிக்கையை பூச்சியமாக எழுதுதல் வேண்டும். அவ்வாறான விலைமனுதாரர் ஏனைய சுற்றுக்களில் விலைமனுக்களை இடுவதற்கு தகைமைகளைப் பார்ப்பதில்லை.

18.4.4 முதலாவது சுற்றில், விலைமனுதாரர்கள் அவர்களின் ஆகக் குறைந்த அலைக்கற்றைத் தேவைகளையும் (MSR) குறிப்பிடுதல் வேண்டும், அது அவர்களுக்கு தேவையான ஆகக் குறைந்த பகுதியாக (lots) கணக்கிடப்படும்.

18.4.5 குளொக் கட்டத்தின் இறுதியில் வெற்றிபெற்ற விலைமனுதாரர்களுக்கிடையே பகுதிகள் பகிர்ந்தளிக்கப்படும் போது, விலைமனுதாரரினால் அலைக்கற்றையொன்று (ஸ்பெக்டரம்) போதுமானதாக இல்லை என கருதும் போது பெற்றுக் கொள்ளாததாக இத்தால் உறுதிப்படுத்தப்படும்.

18.4.6 முதலாவது சுற்றின் இறுதியில், தனி விலைமனுவை வெளிப்படுத்தாது, மொத்த கேள்வி நிலவுகின்ற விநியோகத்தை விஞ்சுகின்றதா என ஏலதாரரினால் வாய்மொழி மூலம் அல்லது இலத்திரனியல் வெளிப்படுத்தல் மூலம் விலைமனுதாரர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

18.4.7 முழுமையான கேள்வி காணப்படும் விநியோகத்திற்கு சமமான அல்லது குறைவானதாயின், இது குளொக் கட்டத்தின் இறுதியிலாக இருப்பதுடன் அவர்களின் வெளியிடப்பட்ட கேள்விக்கு ஏற்ப விலைமனுதாரர்களுக்கு பகுதிகளின் அளவு கையளிக்கப்படுதல் வேண்டும்.

18.4.7.1 மொத்த கேள்வி நிலவுகின்ற விநியோகத்திலும் பார்க்க அதிகமாயின், உயர் குளொக் விலையுடன் கூடிய இன்னுமொரு சுற்றொன்று நிகழ்தல் வேண்டும்.

18.4.7.2 மொத்த கேள்வி ஆக்க குறைந்த விலை நிலவுகின்ற விநியோத்தை விஞ்சிச் சென்றால், இரண்டாவது சுற்று தொடர்பாக குளொக் விலை அதிகரிக்கப்படும். ஏலத்தின் முன்னேற்றத்தின் படி, குளொக் அதிகரிப்பு பொதுவாக 5% முதல் 15% வரையான எல்லையில் இருக்கும் வகையில் ஒரு சுற்றிலிருந்து இன்னொரு சுற்றுக்கு மாறுபடுதல் வேண்டும். இரண்டாவது சுற்று திறக்கப்படுவது ஏலதாரரினால் தீர்மானிக்கப்பட்ட கால எல்லையின் பின்னர் எனவே அக் காலத்தினுள் அடுத்த சுற்று தொடர்பாக அவர்களின் உபாய வழிகளை திட்டமிடுவதற்கு ஏலதாரர்களுக்கு காலம் உண்டு.

18.4.7.3 இரண்டாவது சுற்றில், தீர்மானிக்கப்பட்ட கால எல்லையினுள் அவர்களுடைய கோரிக்கையை (புதிய குளொக் விலைக்கு அவர்கள் கொள்வனவு செய்கின்ற பகுதிகளின் எண்ணிக்கை) வெளியிடுவதற்கு விலைமனுதாரர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்படும். முதலாவது சுற்றில் உள்ள கோரிக்கை குறைந்த அல்லது அவர்கள் கோரிக்கையை அதிகரித்ததாக அவர்கள் குறிப்பிடுதல் வேண்டும்.

18.7.4.4 இரண்டாவது சுற்று மற்றும் பின்னரான சுற்றுக்களில், “எல்லை: சுற்று விலைமனு இடுவதற்கு” அவகாசம் வழங்கப்படும், அதன் மூலம் தெளிவாவது விலைமனுதாரர்கள் நடைமுறை குளொக் விலைக்கு மாத்திரம் அல்லாது, நடைமுறை மற்றும் இறுதி குளொக் விலைக்கிடையே எந்தவொரு விலைக்கும் கோரிக்கையை குறிப்பிடுதல் வேண்டும் எனவாகும். எவ்வாறாயினும், அவர்கள் அடுத்த சுற்றில் விலைமனுவை இடுவதற்கு தகைமை பெறுவதற்கு நடைமுறை க்ளொக் விலைக்கு கோரிக்கையை வெளியிடுதல் வேண்டும்.

18.4.7.5 ஒவ்வொரு சுற்று முடிவில் விலைமனுதாரர்களின் அனுபவம் மற்றும் அவர்களின் எடுக்கின்ற தீர்மானங்களின் சிக்கல் தன்மையின் படி சுற்றுக்களில் மற்றும் இடைவெளிகளின் கால எல்லை மாற்றமடைதல் வேண்டும்.

18.4.7.6 விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நீக்கிக் கொள்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது.

18.4.7.7 சுற்றொன்றில் குளொக் விலைகளின் மொத்த கேள்வி காணப்படுகின்ற விநியோகத்திற்கு சமமாக இருக்கின்ற போது அல்லது அதிலும் பார்க்க வீழ்ச்சியடைகின்ற க்ளொக் கட்டம் நிறைவதல் வேண்டும்.

i. இறுதிச் சுற்றின் இறுதியில் குளொக் விலையில் கோரிக்கை, விநியோகத்திற்குச் சமமானதாயின், நிலவுகின்ற பகுதி (lots) அவர்களின் வெளியிட்ட கோரிக்கைக்கு ஏற்ப ஏலதாரர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

ii. குளொக் விலையில் கேள்வி விநியோகத்திலும் பார்க்க குறைவடைந்தால், விலைமனுதாரர்களுக்கு அவர்களுடைய வெளியிட்ட கோரிக்கைக்கு ஏற்ப பகுதிகள் (lots) வழங்குதல் வேண்டும்.

18.4.7.8 குளொக் கட்டத்தின் முடிவில் விற்பனை செய்யப்படாது எஞ்சியுள்ள பகுதிகளை (lots) வழங்குவதற்காக, கேள்வி நிரம்பலை விஞ்சிச் போகின்ற போது இறுதி குளொக் விலைக்குச் சமமான ஆகக் குறைந்த விலையுடன், இரண்டாவது விலையுடன் கூடிய தனிச் சுற்றில் முத்திரையிடப்பட்ட விலைமனு ஏலம் தொடர்பான சட்டங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

19. சில ஏலங்களில் பொதி தொடர்பாக விலைமனு விண்ணப்பிக்கும் போது, அலைக்கற்றைகளை (ஸ்பெக்டரம்கள்) பெற்றுக் கொள்வதற்கான இயலுமை மற்றும் அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பயன்பாட்டின் படி பொதி தொடர்பாக விலைமனுவை செய்வதற்கு ஏலதாரர் அனுமதி வழங்குதல் வேண்டும். ஏலதாரரினால் அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) பகுதிகள் (lots) தொடர்பாக தீர்க்கமான பொதியை வழங்குவதற்கோ அல்லது தேவையான பகுதிகளை (lots) கலப்புச் செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

20. வழங்கல் அறிவித்தலில் (NoA) குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஏலம் தொடர்பாக அலைக்கற்றைகளின் கெப்ஸ் (Spectrum caps) ஏலதாரரினால் தயார் செய்யப்படுதல் வேண்டும். செயற்படுத்துநர்கள் ஒருவர் அல்லது பலரின் கைக்கு அலைக்கற்றைகள் (ஸ்பெக்டரம்கள்) தேவையற்ற வகையில் செல்வதன் மூலம் ஏற்படுகின்ற சந்தை மாற்றத்தை தவிர்ப்பதற்கு அலைக்கற்றைகளின் (ஸ்பெக்டரம்கள்) நியாயமான பகிர்வொன்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

21. ஆணைக்குழுவினால் அடிக்கடி வெளியிடப்பட்ட அலைக்கற்றைகள் (ஸ்பெக்டரம்கள்) அனுமதிப் பத்திர கட்டண விதிகள் / ஒழுங்குவிதிகளின் படி ஏலதாரரினால் ஆகக்குறைந்த விலை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

வரைவிலக்கணம்:

ஆகக் குறைந்த விலை - ஆகக் குறைந்த விலை என்பது ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட பகுதிகள் (lots) தொடர்பாக TRCSL ஆல் ஏற்றுக் கொள்ளப்படும் குறைந்த விலையாகும்.

ஏலதாரர்கள் - ஏலத்தை நடாத்துவதற்கு ஆணைக்குழுவினால் பெயர் குறிப்பிட்ட நபர் அல்லது ஏலத்தை நடாத்துவதற்கு ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவொன்று என்று பொருள்படும்.

விசேட பங்குகள் - ஏலத்தின் போது நிச்சயமான மீடிறன்களுக்கு பகிரப்பட்டுள்ள அலைக்கற்றை பகுதிகள் (lots) விசேட பங்குகளாக அறிமுகம் செய்யப்படும்.

| | |
|---|---|
| சாதாரண பங்குகள் | - ஏலத்தின் போது நிச்சயமான மீடிறனுக்கு பகிரப்பட்டுள்ள –அலைக்கற்றை பகுதிகள் (lots) சாதாரண பங்குகளாக அறிமுகம் செய்யப்படும். |
| ஆணைக்குழு | - சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, ஆணைக்குழு என அறிமுகம் செய்யப்படும். |
| பொதி விலைமனு விண்ணப்பித்தல் | - அலைக்கற்றைப் பகுதி (lots) களின் ஆரம்ப நிச்சயமான பொதி தொடர்பாக அல்லது ஏதேனும் பகுதிகள் (lots) கலப்பொன்று தொடர்பாக ஏலதாரர்களினால் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல். |
| விலைமனுதாரர் | - விலைமனுதாரராக பதிவு செய்யப்பட்டுள்ள நபர்கள். |
| விலைமனு விண்ணப்பம் | - என்பதன் கருத்து தனிப் பகுதியொன்று (a lot) / பொதியொன்று தொடர்பாக செய்யப்பட்ட விலைமனுவாகும். |

EOG 08 - 0180

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*